பக்கங்கள் 16

# காலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 வைகாசி 23 வெள்ளிக்கிழமை 06.06.2025 அதிர்வு 306

## தமிழரசுக் கட்சியை ஆதரிக்கமாட்டோம்

### தேசிய மக்கள் சக்தி அறிவிப்பு



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கத் தேசிய மக் 02▶

# செம்மணியில் மேலும் ஒரு மனிதப் புதைகுழி உள்ளது?

## பூர்வாங்க ஆய்வுகளில் கண்டுபிடிப்பு

(ந.லோகதயாளன்)

யாழ். அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானப் பகுதியில் தற்போது தோண்டப்படும் மனிதப் புதைகுழி இடத்துக்கு மேலதிகமாக மற்றுமோர் மனிதப் புதைகுழி இருப்பதாக அஞ்சப்படுகின்றது.

தற்போதைய பூர்வாங்க ஆய்வுகளில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளது.

எனவே, அந்தப் பகுதியை முழுமையாக 03▶





# செம்மணியில் இதுவரை 18 எலும்புக்கூடுகள்

## மனிதப் புதைகுழி அறிவிப்பு வழக்கில் இன்று நீதிமன்றம் கட்டளை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத் தில் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி யில் நேற்று வியாழக்கிழமை வரை ஒரு சிசுவின் எலும்புக்கூடு உட்பட 18 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவற்றில் 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் முழுமையாக வெளியே எடுக்கப்பட்டுள்ளன.

மேற்படி மனிதப் புதைகுழியில் இரண்டாம் கட்டமாக 4ஆவது நாளாக நேற்றும் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன. இதன்போது, மேலும் 5 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் 03▶







இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் நேற்று மாலை ஈ.பி.டி.பியின் தலைமையகம் அமைந்துள்ள ஸ்ரீதர் தியேட்டருக்கு நேரில் சென்று டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்து விட்டு புறப்பட்ட கையோடு ஈ.பி.டி.பியின் மூத்த தோழர் ஒருவர் - அதன் தலைவர் டக்ளஸுக்கு மிக நெருக்கமானவர் - எனக்குத் தொலைபேசி அழைப்பு எடுத்தார்.

"உங்கள் நாரதர் வேலையை 36 மணி நேரத்தில் கனகச்சிதமாக முடித்து விட்டீர்கள்" என்றார் அவர்.

நான் சிரித்தேன். நாரதர் கலகம் எப்போதும் நன்மையில்தான் முடியும் என்றேன் நான்.

"ஆமாம்.பெரும்பாலும் 03▶

# ஈ.பி.டி.பி.யுடன் தமிழரசு பேச்சுவார்த்தையா? தனக்கு எதுவும் தெரியாது என்கிறார் சிறீதரன்

உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்கே கட்சி தீர்மானித்திருந்ததாகச் சுட்டிக்காட்டிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கட்சியின் தலைவரான டக்ளஸ் தேவானந்தாவுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றி தனக்கு எதுவும் தெரியாது எனவும் தெரிவித்தார்.



உள்ளூராட்சி சபைகளில் இணைந்து ஆட்சியமைப்பது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானமும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் நேற்று வியாழக்கிழமை மாலை சந்தித்துப் பேசியுள்ளன.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சிறீதரன் எம்.பி.,

"உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து டக்ளஸ் தேவானந்தாவுடன் கலந்துரையாடுவது பற்றி கட்சியின் உயர்மட்டக் குழுவில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. ஆகவே, இந்தச் சந்திப்பு தொடர்பில் எனக்கு எதுவும் தெரியாது.

உள்ளூராட்சி சபைகளில் கூட்டணி அமைப்பது குறித்து தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் பேசுவதற்கே இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்திருந்தது. அவ்வாறிருக்கையில் தமிழ்த் தேசியத்துக்கு விரோதமான கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதெனில், அது பற்றி கட்சியின் உயர்மட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டியது அவசியம்." – என்றார்.

## சாணக்கியன் எம்.பியின் தனிநபர் பிரேரணையான

# மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் சமர்ப்பிப்பு

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனால் தனிநபர் பிரேரணையாக மாகாண சபைகள் தேர்தல்கள் திருத்தச் சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.



இதனை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிஷாம் காரியப்பர் வழிமொழிந்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சமர்ப்பிக்கப்பட்ட மாகாண சபைகள் தேர்தல் திருத்தச் சட்டமூலம் தொடர்பான வர்த்தமானி கடந்த மே 22 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அந்த வர்த்தமானி அறிவித்தலில் 2017ஆம் ஆண்டில் செப்டெம்பர் 21ஆம் திகதி வலுவில் இருந்த 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் 2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தால் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் எவ்வாறிருப்பினும், 2017 செப்டெம்பர் 22 ஆம் திகதியில் இருந்து தொடங்குகின்றதும் இந்தச் சட்டம் நடைமுறைக்கு வருகின்ற திகதி வரைக்குமான காலப்பகுதியின்போது செய்யப்பட்ட ஏதேனும் செயலுக்குப் பங்கமின்றி, அத்தகைய செயல் 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்கச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாக விராத அளவுக்கு இச்சட்டம் வலுவுக்கு வருகின்ற திகதியில் இருந்து பயனுறுவதாக நடைமுறைக்கு வருதல் வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியனால் இந்தச் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## தமிழரசுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் சக்தி ஆதரவளிக்கவுள்ளது என்ற தகவலில் எவ்வித உண்மையும் இல்லை என்று தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாணம் மாநகர சபை உறுப்பினர் சு.கபிலன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை உட்பட சில சபைகளில் இலங்கை தமிழரசுக் கட்சி ஆட்சியமைக்கத் தேசிய மக்கள் சக்தி ஆதரவளிக்கும் என்று வெளியான செய்திகள் தொடர்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

"தேர்தல் காலத்திலும் தேசிய மக்கள் சக்திக்கு எதிராக மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பியவர்கள் தேர்தலுக்குப் பின்னரான ஆட்சியமைப்புக்கு இடைப்பட்ட இக்காலத்திலும் மக்கள் மத்தியில் வதந்திகளைப் பரப்பி வருகின்றார்கள்.

எமது மக்களை வதந்திகள் மூலமாக வழிநடத்தி நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெற்றதாகக் கருதும் எந்தவொரு சுயநல அரசியல் கட்சிகளுடனும் கூட்டுச் சேரவோ – இணைந்து பயணிக்கவோ தேசிய மக்கள் சக்தியினரான நாம் முன்வரப் போவதில்லை என்பதை எமது மக்களுக்குப் பொறுப்புடன் அறியத்தருகின்றோம்.

எமது மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் எமக்கு வாக்களித்த மக்கள் – வாக்களிக்காத மக்கள் என்ற பேதமின்றி ஒவ்வொருவரும் சமூகம் சார்ந்தும், பிராந்தியம் சார்ந்தும் உயர்வு பெற வலுவான எதிரணியாகச் செயற்படுவோம்." – என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசுக்கு நன்மையில் முடித்திருக்கிறீர்கள்" - என்றார் அவர்.

"எதிர்த்தரப்பு உங்களில் செமகடுப்பில் இருக்கின்றது" - என்றும் அவர் சொன்னார்.

நான் அந்த எதிர்த் தரப்பு எது என்ற விசாரணையில் இறங்கவில்லை.

"எனக்குக் கிடைத்த செய்தியை - தகவலை - என் பாணியில் செய்தியாக்கினேன். அவ்வளவுதான்." - என்ற சாரப்பட சுருக்கமாக விளக்கம் கொடுத்தேன்.

"உங்கள் அலுவலகத்துக்கு வந்த தமிழரசுத் தலைவர் உங்கள் தலைவரிடம் என்ன பேசினார்?" - என்று நான் கேட்டேன்.

"உள்ளூராட்சி சபைகளை அமைப்பதில் இலங்கை தமிழரசு கட்சிக்கு ஈ.பி.டி.பியின் ஆதரவை உத்தியோகபூர்வமாக - உரிமையோடு - அவர் கோரினார்" - என்றார் அந்தத் தோழர்.

"அதில் ஒரு விடயம் மேலதிகமாக இருக்கின்றது" - என்றேன் நான்.

"தேர்தலுக்குப் பின்னர் சபைகள் அமைப்பதில் ஏனைய தமிழ் கட்சிகளுடன் சேர்ந்து செயல்படுவோம் என்று தேர்தலுக்கு முன்னரே தமிழரசுக் கட்சி சொல்லிவிட்டது. உத்தியோகபூர்வமாக இன்னொரு தமிழ்க் கட்சியான ஈ.பி.டி.பியிடம் சபைகள் அமைப்பதற்கு ஆதரவு தாருங்கள் என்று இப்போது வெளிப்படையாக, பகிரங்கமாக நேரில் வந்து அழைப்பும் விடுத்திருக்கிறது. ஆனால் மற்றொரு தமிழ்க் கட்சி, அது அதன் கூட்டணி சகாக்கள் கடுமையாக எதிர்த்ததால் உங்கள் பெரிய தோழரை (டக்ளஸ் தேவானந்தாவை) நேரில் வந்து சந்தித்து ஆதரவு கோருவதைக் கூட பின்னடித்துத் தள்ளிப் போட்டு விட்டது. ஒரு புறம் நேரடியாகவும் பகிரங்கமாகவும் ஆதரவு கோரி அழைப்பு. மறுபுறம் நேரில் வந்து ஆதரவு கோருவதற்குக் கூட தகுதியில்லாத தரப்பு என்று உங்களை உதாசீனப்படுத்தி நிராகரிக்கும் போக்கு. உங்கள் தலைவர் என்ன முடிவு எடுக்கப் போகிறார்?" - என்று நான் கேட்டேன்.

"முதலாவது உள்ளூராட்சி சபை அமைப்பதற்கு இன்னும் 8,9 நாள்கள் இருக்கின்றன. அவசரம் எதற்கு? கட்சியில் மற்றைய மூத்த உறுப்பினர்களுடன் ஆலோசித்த பின்னர் கட்சியின் செயலாளர் நாயகம் ஒரு முடிவை எடுப்பார். ஆக்கபூர்வமான நல்ல முடிவை எடுப்பார்." - என்றார் அந்த ஈ.பி.டி.பி. பிரமுகர்.

அவர் இன்னொரு விடயத்தையும் சுட்டிக் காட்டினார்.

"2018 உள்ளூராட்சி தேர்தலின் பின்னர் இதே போன்ற நிலைமை ஒன்று வந்த போது அப்போது தமிழரசுக் கட்சி தலைவராக இருந்த மாவை சேனாதிராஜா இதே போன்று தொலைபேசி மூலம் ஆதரவைக் கோரிவிட்டு சற்றுக் காலத்தின் பின்னர் தாம் ஆதரவு கோரவே இல்லை என்று புரட்டிச் சொன்னார். அதை எங்கள் கட்சியின் தலைவர் மறந்து விடவில்லை" - என்று அவர் நினைவூட்டினார்.

"அந்த சர்ச்சை எனக்கும் தெரியும். அது பற்றிய செய்திகளை அப்போது நானும் வெளியிட்டு இருக்கிறேன். ஆனால் அப்போது இருந்த தலைவர் மாவை சேனாதிராஜா. இப்போது இருக்கின்ற தலைவர் சி.வி.கே.சிவஞானம். முன்னையவர் சத்தம் சந்தடியின்றி தொலைபேசியில் ஆதரவு கேட்டார். இவர் வெளிப்படையாக - பகிரங்கமாக - நேரில் வந்து சந்தித்து ஆதரவு கேட்கின்றார். இரண்டுக்கும் இடையில் வித்தியாசம் இருக்கின்றது" - என்றேன் நான்.

"ஆமாம். அதனை எங்கள் பெரிய தோழர் நன்கு உள்வாங்கிக் கொண்டிருக்கின்றார். அதனால் தான் சாதகமான முடிவு எடுப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன என்று நம்புகிறேன்." - என்றார் அவர் .

☆ ☆ ☆

கிழக்கில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் உள்ளூராட்சி சபைகளை அமைப்பது தொடர்பில் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் கூடி ஆராய்ந்து இருக்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன், வைத்தியர் ஸ்ரீநாத் மற்றும் ஸ்ரீநேசன், அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் ஆகியோர் கொழும்பில் கட்சியின் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனின் இல்லத்தில் நேற்று முன்தினம் முன்னிரவில் கூடி விரிவாக ஆராய்ந்து முடிவுகளை எடுத்தனர் எனத் தெரிகிறது.

சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு பொறுப்பான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொரு சபைக்கும் உரிய வழிகாட்டலை உரிய சமயத்தில் வழங்குவரெனத் தெரிகிறது.

☆ ☆ ☆

'சங்கு - சைக்கிள் கொள்கைக் கூட்டணி' டக்ளஸ் தேவானந்தாவுடன் இரகசியமாகப் பேச முற்பட்ட முயற்சி செய்தியானதோடு அந்த விடயம் சொதப்பி நிற்பது அனைவருக்கும் தெரியும்.

இப்போது இதே சங்கு - சைக்கிள் கூட்டணியின் அடுத்த மட்ட பிரமுகர்கள் நால்வர் மான் தரப்போடு பேசுவதற்காக யாழில் மான் அணியின் ஓர் முக்கிய உறுப்பினர் வீட்டிற்கு ஒரு யோசனைத் திட்டத்தோடு போயுள்ளனர். (கட்சிகளின் தலைமையின் அனுமதியோடு போனவர்களா என என்னைக் கேட்கக் கூடாது.) அவ்வாறு போன நால்வரில் மூவர் தற்போது இடம்பெற்ற உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியவர்கள் என்பது உறுதியானது. நான்காவது நபரைப் பற்றித் தெரியவில்லை.

இந்த அணியில் மாநகர சபை, மானிப்பாய் பிரதேச சபைகளில் வெற்றியீட்டிவர்களும் உள்ளடக்கம். இதில் நகைச்சுவையான விடயம் என்னவென்றால் மான் அணியின் உறுப்பினர் வீட்டிற்குச் சென்றபோது உறுப்பினரின் மனைவியே இவர்களை வரவேற்று இருத்தியிருக்கின்றார். பின்னர் வீட்டுக்குள் சென்று இவ்வாறு இவர்கள் வந்திருக்கும் தகவலை கணவனிடம் தெரிவித்துவிட்டு வெளியே வந்து பதிலளித்துள்ளார்.

கணவர் காய்ச்சல் காரணமாகப் படுக்கையில் இருக்கின்றார் என்ற போது, 'பரவாயில்லை, ஒருதடவை சந்தித்துச் செல்கின்றோம்' என்றுள்ளனர்.

இதனால் மீண்டும் உள்ளே சென்று கணவனிடம் பேசி விட்டு வெளியே வந்த மான் அணியின் உறுப்பினரது மனைவி, சந்திப்பதில் பிரச்சினை இல்லையாம், ஆனால் சிக்கன்குனியா காய்ச்சலில் உள்ளவரை நீங்கள் சந்திக்க விரும்பினால் அவர் வெளியே வருவார் என்றாராம்.

அவ்வளவுதான். வந்த நால்வரும் போய் வருகிறோம் என்று கூடக் கூறாமல் தலை தெறிக்க நடையைக் கட்டியுள்ளனர்.

இதன் பின்னர் இடம்பெற்ற தொலைபேசி உரையாடலில் 'இல்லை. சங்கு - சைக்கிள் கூட்டணியோடு இணங்கும் நிலைமை இல்லை. நாம் தமிழ் அரசுக் கட்சியுடன் ஓர் இணக்கத்திற்கு வந்துள்ளோம்.'-எனப்பதிலளிக்கப்பட்டுள்ளதாகத் தகவல்.

மானஸ்தன் இதற்கும் 'ஃபேக் நியூஸ்' என்கின்றாரோ அல்லது பொய்யான, கற்பனைக் கதை என்கிறாரோ தெரியவில்லை.....!

## செம்மணியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கண்டறியப்பட்டன.

இந்த மனிதப் புதைகுழியில் காணப்படும் எலும்புக்கூடுகள் ஆண், பெண், குழந்தைகள், சிறுவர்கள் எனக் காணப்படுவதனால் அவை குடும்பங்களாகக் காணாமல் ஆக்கப்பட்டோரின் எலும்புக்கூடுகளா என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இதனிடையே, இதனை மனிதப் புதைகுழியாக அறிவிக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் இன்று நீதிவான் கட்டளை பிறப்பிக்கவுள்ளார்.

முன்னதாக, மூன்றுக்கு மேற்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதிகள் கண்டறியப்பட்டமையால் இதனை மனிதப் புதைகுழியாக அறிவிக்கக் கோரி சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

இது தொடர்பான ஆதாரங்கள் – அறிக்கைகளை வெள்ளிக்கிழமை (இன்று) சமர்ப்பிக்குமாறு நீதிவான் ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டிருந்தார்.

இதன்படி, இன்றைய தினம் மனிதப் புதைகுழியாக அறிவிப்பது தொடர்பில் கட்டளை பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## செம்மணியில் மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனிதப் புதைகுழி காணப்படும் பிரதேசமாகப் பிரகடனப்படுத்துமாறு நீதிமன்றத் திடம்கோரிக்கைமுன்வைக்கப்படவுள்ளது.

இதனால் செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் பல நூறு பேர் ஒரே காலகட்டத்தில் தொகுதி, தொகுதியாகப் புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தற்போது எழுந்துள்ளது.

இதன் காரணமாக அந்தப் பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சிப் பேராசிரியர் ராஜ் சோமதேவாவின் உதவி நாடப்பட்டுள்ளது.

இதற்கமைய நிலத்தின் கீழ் ஸ்கான் செய்யப்பட்டு அவற்றின் மாதிரிகள் நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படவுள்ளதுடன் இந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பை அதிகரிக்கவும் கோரிக்கை விடப்படவுள்ளது எனவும் அறியமுடிகின்றது.



# செயற்கை நுண்ணறிவால் கட்டுப்படுத்தப்படும் கருவிகளை பஸ்களில் பொருத்த தீர்மானம்

நீண்டதூர பயணச் சேவையில் ஈடுபடுகின்ற அரச மற்றும் தனியார் பஸ்களுக்கு செயற்கை நுண்ணறிவால் கட்டுப்படுத்தப்படும் கருவிகளைப் பொருத்த நடவடிக்கை எடுப்பதாக போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று உரை யாற்றிய அவர், எதிர்வரும் 2 மாதங்க ளுக்குள் 40 பஸ்களுக்கு இவ்வாறான கருவிகள் பொருத்தப்படவுள்ளன என அவர் கூறியுள்ளார்.

நீண்டதூர பயண சேவையில் ஈடு படுகின்ற பஸ்களில் பொருத்தப்படவுள்ள இந்த கருவிகள், பஸ் சாரதிகளை அவ தானத்துடன் வைத்திருக்க உதவும்.

பஸ்களுக்கான இந்த கருவி பொருத்தப்படும் வேலைத்திட்டத்தை விரிவாக்க கட்டம் கட்டமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் இலங்கை போக்குவரத்து சேவையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டி இருப்பதாகவும், இதற்காக முன்வைக்கப்பட்ட 85 அம்ச யோசனை ஜுலை மாதம் முதலாம் திகதி முதல் அமுலுக்கு வரும் என்றும் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரி வித்துள்ளார்.

# உப்பை அதிக விலைக்கு விற்றால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்




உப்பு இறக்குமதியாளர்கள் அதிக விலைக்கு உப்பினை விற்பனை செய்தால், உப்புக்கான உச்சபட்ச விலையை நடைமுறைப்படுத்த நேரும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“உள்நாட்டில் உப்புக்கான தட்டுப்பாட்டு நிலவியதன் காரணமாக அதனை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டது.

மாறாக வர்த்தகர்கள் இலாபமீட்டுவ தற்காக அல்ல.

இறக்குமதி செய்யப்பட்ட உப்பு கிலோ ஒன்று, 40 சதவீத வரியுடன் 77 ரூபா என்ற கிரய மதிப்பைக் கொண்டுள்ளது. மொத்தவியாபரிகள் 30 ரூபா வரையில் இலாபம்பெறஅனுமதிக்கப்படுகின்றனர்.

அதன்படி ஒருகிலோ உப்பின் விலை 110 ரூபா முதல் 120 ரூபா வரையில் விற்பனை செய்யப்படலாம்.

அதனைத் தவிர்த்து அதிகவிலைக்கு விற்பனை செய்ய முயற்சித்தால், அரசாங்கம் அதற்கு எதிராக செயற் படும்.” என்றார்.






# சுற்றாடலை மீட்டெடுத்து வருங்கால சந்ததியினருக்கு வழங்குவதே நமது பொறுப்பு: ஜனாதிபதி அநுரகுமார

கொங்கிறீட் பிளாஸ்டிக்கினால் அழிந்துள்ள சூழலை மீட்டெடுக்கும் பொறுப்பு அனைவருக்கும் இருப்பதாகவும், தேசிய ஐக்கியத்தை உருவாக்குவதற்கு சுற்றாடலைப் பயன்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

பொதுவான தேசிய உணர்வுடன் பூமியுடன் பிணைப்பைக் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு நமது தலைமுறைக்கு உள்ளது என்றும், இந்தப் பொறுப்பை புறக்கணிக்கக் கூடாது என்றும், எந்தவித பாகுபாடும் இல்லாமல் அனைவரும் இதில் இணைய வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கேகாலை நிதஹஸ் மாவத்தையில் நேற்று நடைபெற்ற உலக சுற்றாடல் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டுக்கான உலக சுற்றாடல் தினத்தின் தொனிப்பொருள் 'பிளாஸ்டிக் பாவனையை ஒழிப்போம்' என்பதுடன், 'முளைப்பதற்கு இடமளிப்போம்' என்ற தொனிப்பொருளின் கீழ் பல வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

சுற்றாடல் மறுமலர்ச்சிக்குத் தேவையான சந்தர்ப்பத்தை உருவாக்கும் நோக்கத்துடன் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுவதுடன், உலக சுற்றாடல் தினத்தை ஒரு சம்பிரதாயமாகக் கொண்டாடுவதற்குப் பதிலாக, சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் ஆரம்பிக்க எதிர்பார்க்கிறது.

பந்துல பெத்தியாவின் வாழ்விடமானது சரணாலயமாக அறிவிக்கப்படல், நில்கல உள்ளிட்ட புதிய வனப்பகுதிகள் குறித்த நான்கு வர்த்தமானிகளை வெளியிடல், 03 சூழல் நேய மாதிரிப் பாடசாலைகள் மற்றும் பசுமை ரயில் நிலையங்களை பாராட்டல் என்பன இந்த நிகழ்வில் இடம்பெற்றன.

சுற்றாடல் அமைச்சு மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள், அனைத்து அரச நிறுவனங்கள், கிளீன் ஸ்ரீலங்கா செயலகம் மற்றும் சுற்றாடல் அமைப்புகளுடன் இணைந்து இந்த ஆண்டு சுற்றாடல் தினம் கொண்டாடப்படுகின்றது.





# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பகல் கனவுக் கற்பனை

ஒரு விடயத்தை அல்லது இலட்சியத்தை அடைவதற்கான மன உறுதி அல்லது திடசங்கற்பம் உள்ளத்தில் இருக்குமானால் அதை எட்டுவதற்கான வழி கிட்டும். அதை உறுதிப்படுத்துமாறு போல அமைவது தான் "If there's a will, there's a way" என்ற ஆங்கிலப் பழமொழி.

இலங்கையில் பல விடயங்கள் உறுதியாகப் பேசப்பட்டாலும், தெளிவான நடவடிக்கைகளோ, பிரயோசனமான தீர்வுகளோ கிட்டுவதில்லை. அதற்கு காரணம் இந்த விடயங்களில் இறுதி இலக்கை அடைய வேண்டும் என்று மன உறுதி - திடசங்கற்பம் - இல்லாமை தான்.

இலங்கையின் கல்வித்துறையில் பெரும் இழுக்காக - அநாகரீகமாக - மனித நாகரிகத்துக்கே ஒவ்வாத காட்டுமிராண்டித்தனமாக - கொடூரமான - செயற்பாடாக தொடர்வது 'றாகிங்' எனப்படும் பகிடிவதை கொடுமையாகும்.

இது பற்றி பல பத்தாண்டுகளாக பேசிக் கொண்டிருக்கிறோம். சமூகத்தில் கண்டனக் குரல்கள் எல்லா மட்டத்திலும் தொடர்ந்து வெளியாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் கேட்பார், தடுப்பார், மறிப்பார் இன்றி அந்தக் குரூரம் கல்வி கற்றவர்கள் என்று கூறப்படும் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியில் மோசமாக புரையோடித் தொடர்கின்றது. மிக மோசமாக நீடிக்கின்றது.

அதைத் தடுப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகள் குறித்து அவ்வப்போது ஆர்வாரமாகப் பேசப்பட்டாலும், அந்தப் பெரும் கொடூரத்தை சமூகத்தில் இருந்து ஒட்ட நறுக்கி அகற்றுவதற்கான மன உறுதி - திடசங்கற்பம் - அதைச் செய்ய வேண்டிய அரசியல் தலைமைகளிடம் இல்லை என்பதுதான் அந்த குரூரம் பிரிக்க முடியாத கேவலமாக சமூகத்தில் நீடிக்கின்றமைக்குக் காரணம்.

தங்களுடைய நீதி, நியாயமான உரிமைகளை அடைவதற்காக ஈழத் தமிழர்கள் நடத்திய ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாக சித்தரித்து, அழித்தொழித்த சிங்களத்துக்கு அந்தப் போராட்டத்தை எந்த விலை கொடுத்தாவது சின்னாபின்னமாக்க வேண்டும் என்ற பற்றுறுதி இருந்தது. நோக்கம் நல்லது அல்ல எனினும் - நியாயமேயற்றது எனினும் - அந்த குரூரத்திற்கு அவர்கள் மத்தியில் திடசங்கற்பம் இருந்தது. அதனால்தான் அந்த நடவடிக்கையில் இடம்பெற்ற இனப்படுகொலைகள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை குறித்து எல்லாம் பொறுப்பு கூறவோ, நடவடிக்கை எடுக்கவோ, நீதியை நிலைநாட்டவோ, குற்றவாளிகளை தண்டிக்கவோ மறுத்து சிங்களம் இன்னும் விடாப்பிடியாக நிற்கின்றது. நின்று தனது காரியத்தைச் சாதித்தது.

ஆனால் சமூகத்தை சீரழித்து நிற்கும் - மனித நாகரீகத்திற்கு ஒவ்வாத - மிகக் குரூரமான பண்பியல்பான - றாகிங்கை அடியோடு ஒழிக்கும் விடயத்தில் அத்தகைய பற்றுறுதியோ, திடசங்கற்பமோ அரசியல் தலைமைகளிடமோ நாட்டு மக்களிடமோ இல்லை. அதனால்தான் அந்தக் குரூரம் கட்டுமட்டுமில்லாமல் நமது நாட்டில் தொடர்ந்து நீடிக்கிறது.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களில் பதிவாகும் பகிடிவதைகளுக்கு எதிராக செயலணி ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனக் கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய நாடாளுமன்றத்தில் தெரிவித்திருக்கின்றார்.

இவ்விடயம் தொடர்பான 1978/16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் கீழ் நாட்டில் அமைந்துள்ள 17 பல்கலைக்கழகங்களில்எந்த பல்கலைக்கழகத்திலும் பகிடிவதைகள் தடைச் சட்டத்தின் கீழ் கடந்த 5 வருடங்களில் எவ்வித வழக்கும் தொடரப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் இந்தக் கொடூரத்தை அடியோடு இல்லாதொழிப்பதற்கான மனவுறுதி - திடசங்கற்பம் - தீவிரமான இலக்கு - ஆட்சித் தலைமையிடம் இல்லாத வரையில், இத்தகைய சமூகச் சீரழிவுகளை முடிவுக்குக் கொண்டு வருவதென்பது வெறும் பகல் கனவுதான்.

# துமிந்த திசாநாயக்கவுக்கு தொடர்ந்தும் விளக்கமறியல்



முன்னாள் அமைச்சர் துமிந்த திசா நாயக்க தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக் கப்பட்டுள்ளார்.

கல்கிசை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று அவரை ஆஜர்ப்படுத்தப்பட்டதை அடுத்து எதிர் வரும் 19ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக் கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை சொகுசு தொடர்மாடி தொகு தியில் தங்க முலாம் பூசப்பட்ட ரி -56 ரக துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டமை தொடர்பான விசாரணைகளுக்காக முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கடந்த மாதம் 23 ஆம் திகதி கைது செய்யப்பட்டார்.

# நிறைவுகாண் வைத்திய சேவை தொழிற்சங்கம் பணிப்பகிஷ்கரிப்பு

## நோயாளர்கள் அசௌகரியம்

நிறைவுகாண் வைத்திய சேவை தொழிற்சங்கங்கள் நேற்று பணிப்பகிஷ் கரிப்பில் ஈடுபட்டன.

பதவியுயர்வுகளில் ஏற்படும் தாமதம், இணை சுகாதார விஞ்ஞான பீட பட்டதாரி களை சேவையில் இணைத்துக்கொள் ளாமை உள்ளிட்ட 5 பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட் டது.

இரசாயன ஆய்வுகூட நிபுணர்கள், மருந்தாளர்களின் சங்கம் உள்ளிட்ட 05 தொழிற்சங்கங்கள் பணிப்கிஷ்க ரிப்பில் இணைந்தன என நிறைவுகாண் வைத்திய நிபுணர்களின் கூட்டு சம்மேள னத்தின் செயலாளர் சானக்க தர்மவிக் ரம தெரிவித்துள்ளார்.

நிறைவுகாண் மருத்துவ நிபுணர்க ளின் பணிப்புறக்கணிப்பு காரணமாக சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக சென்ற நோயாளர்கள் கடும் அசௌகரி யங்களுக்கு முகம் கொடுத்துள்ள னர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, கண்டி, அனுராதபுரம், காலி, யாழ்ப்பா ணம், உள்ளிட்ட நாடு பூராகவுமுள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் இந்த பணிப்புறக்கணிப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எனினும் புற்றுநோய் வைத்திய சாலை,தாய்மற்றும்சேய்வைத்தியசாலை கள், சிறுநீரகவியல் வைத்தியசாலை மற் றும் மத்திய இரத்த வங்கி உள்ளிட்ட வைத் தியசாலைகளில் பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவில்லை.

# 66,000 வேட்பாளர்கள் தங்கள் தேர்தல் செலவை சமர்ப்பித்துள்ளனர்: தேர்தல்கள் ஆணைக்குழு




நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிட்ட 75,500 வேட்பா ளர்களில், 66,000 இற்கும் மேற்பட்டோர் இதுவரையில் தங்களது தேர்தல் செலவு அறிக்கைகளைச் சமர்ப்பித்துள்ளனர் எம தேர்தல்கள் ஆணைக்குழு தகவல்கள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க தேர்தல் செலவுச் சட்டத்தின் பிரிவு 7 இன் படி, குறித்த தேர்தல் செலவு அறிக்கைக ளைப் பொதுமக்களுக்காகக் காட் சிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.

தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரிக ளிடம் ஒப்படைக்கப்பட்ட தேர்தல் செலவு அறிக்கைகளின் சான்றளிக்கப்பட்ட பிரதி கள் எதிர்வரும் 7 ஆம் திகதி முதல் ஒவ் வொரு மாவட்ட தேர்தல் அலுவலகத் திலும் பொதுமக்களுக்காகக் காட்சிப் படுத்தப்படும் எனத் தேர்தல்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்த அறிக்கைகளைக் குறித்த தினத் திலிருந்து ஒவ்வொரு வார நாட்களிலும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை பார்வையிட முடியும் என அறிவிக் கப்பட்டுள்ளது.



# 4 மாதங்களில் வாகன இறக்குமதி மூலம் 136 பில்லியன் ரூபா அரச வருமானம்

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் வாகன இறக்குமதியிலிருந்து அரசாங்கம் 136 பில்லியன் ரூபா வருவாயை ஈட்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையிலான அரச நிதி பற்றிய குழுக் கூட்டத்தில், அண்மையில் இலங்கை சுங்க அதிகாரிகள் இந்த விடயங்களை வெளிப்படுத்தியிருந்தனர்.

இவற்றில் பெறுமதி சேர்வரி, சுங்க வரி மற்றும் சொகுசு வரி ஆகிய வரிகளும் அடங்குவதாக அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர்.

வாகன இறக்குமதியின் ஊடாக இந்த வருடத்தில் 450 பில்லியன் ரூபாய் வருவாய் இலக்கினை அரசாங்கம் நிர்ணயித்துள்ளதாகவும், தற்போதைய சூழ்நிலையில், இந்த இலக்கை அடைய முடியும் எனவும் அதிகாரிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் இதுவரையில் வாகன இறக்குமதிக்காக 596 நாணய கடிதங்கள்திறக்கப்பட்டுள்ளதாகவும், 272மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள வாகனங்கள் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த கூட்டத்தில் கலந்து கொண்ட திறைசேரியின் பிரதி செயலாளர் ஏ.கே.செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் தற்போது வாகன இறக்குமதிக்காகச் செலவிடும் ஒவ்வொரு டொலருக்கும் 1.5 அமெரிக்க டொலர் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் தற்போது 1.7 அமெரிக்க டொலர் வருவாயினை ஈட்டுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பாடசாலை வளாகங்களில் நுளம்பை தடுக்க நடவடிக்கை

## கல்வி அமைச்சு வர்த்தமானி வெளியீடு

பாடசாலை வளாகங்களில் டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் கல்வி அமைச்சு வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் கடந்த மே 31 ஆம் திகதி வரை பதிவான டெங்கு நோயாளர்களில் 05 முதல் 19 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் உள்ளடங்குகின்றனர் என சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

எனவே, நுளம்புகளற்ற பாதுகாப்பான பாடசாலை வளாகங்களை பராமரிப்பதற்காக ஏற்கனவே வெளியிடப்பட்ட ஆலோசனைகளுக்கு மேலதிகமாக முன்னெடுக்கப்பட வேண்டிய நடைமுறைகள் மற்றும் ஆலோசனைகள் தொடர்பில் வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்கள், கல்வி மற்றும் கல்விசாரா ஊழியர்களின் சுகாதாரப் பாதுகாப்பிற்காக அந்த ஆலோசனைகளை பின்



பற்றுமாறு அனைத்து அதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, கல்வி நடவடிக்கைகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அனைத்து பாடசாலை வளாகங்களையும் பராமரிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.








# வவுனியாவில் வீட்டு வளாகத்தில் 9 அடி நீளமான முதலை மீட்பு!

(கி.வசந்தன்)

வவுனியா கொக்குவெளி பகுதியில் வீட்டுவளவில் இருந்து ஒன்பது அடி நீளமான முதலை ஒன்று வனஜீவராசிகள் திணைக்களத்தால் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

அந்த வீட்டிற்கு பின்புறமுள்ள தோட்டப் பகுதியில் முதலை ஒன்று உள்ளதை வீட்டின் உரிமையாளர் அவதானித்துள்ளார். அதனை துரத்துவதற்கு முற்பட்டபோது அந்தக்காணியில் அமைந்துள்ள கைவிடப்பட்ட கிணற்றில் முதலை வீழ்ந்துள்ளது.

இதனையடுத்து வீட்டாரால் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து அந்தப் பகுதிக்கு சென்ற வனஜீவராசிகள் திணைக்களத்தினர் காணியில் அமைந்துள்ள கிணற்றில் இருந்து முதலையைப் பிடித்துச் சென்றனர்.










# திருக்கோவிலில் கட்டாக்காலி மாடுகளின் பிரச்சினை தொடர்பில் தீர்க்கமான முடிவு

## பிரதேச சபை தவிசாளர் நடவடிக்கை



(பாறுக் ஷிஹான்)

திருக்கோவில் பிரதேசத்தில் நீண்ட காலம் நிலவி வரும் கட்டாக்காலி மாடுகள் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வைப் பெற்றுக்கொள்ள தவிசாளர் சசிகுமார் தலைமையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேச கால்நடை உரிமையாளர்கள் மற்றும் திருக்கோவில் பிரதேச சபை, திருக்கோவில் பொலிஸ் நிலையம் மற்றும் திருக்கோவில் மிருக வைத்தியசாலை ஆகிய தரப்பினரும் இணைந்து நேற்று நடாத்திய கலந்துரையாடலின் போது திருக்கோவில் பிரதேசத்தில் கடந்த 05 மாதங்களுக்குள் கட்டாக்காலி மாடுகளினால் ஏற்பட்ட வீதி விபத்துக்களினால் 02 மரணங்களும் அதிகளவான பொருள்சேதங்களும் இடம் பெற்றுள்ளன என்ச் திருக்கோவில் பொலிஸ் பொறுப்பதிகாரி அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

எனவே கட்டாக்காலி மாடுகளை உரிமையாளர்கள் உரிய இடங்களில் கட்டி, வீதிகளில் நடமாடுவதைத் தடுப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருக்கோவில் பிரதேச சபை தவிசாளர் சசிகுமார் அறிவித்துள்ளார்.

அத்துடன் 2025.06.05 தொடக்கம் 2026.06.12 ஆம் திகதி வரை திருக்கோவில் மிருக வைத்தியசாலையில் தங்களது மாடுகளை அடையாளப்படுத்தி அவற்றினை உடனடியாக சட்டரீதியாக பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன் அவ்வாறு பதிவு செய்யப்படாத கட்டாகாலி மாடுகள் பிடிக்கப்பட்டால் 10 ஆயிரம் ரூபாவுக்கும் அதிகமான தண்டப்பணம் அறவிடப்படும் என்பதையும் 03 நாள்களுக்குள் மீட்கப்படாத கட்டாக்காலி மாடுகள் அனைத்தும் சட்டரீதியாக அரச உடமையாக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஏழரை மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்தார் சஷீந்திர ராஜபக்ஷ

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் நேற்று முன்னிலையானார்.

சேதனப்பசளையை நாட்டிற்கு கொண்டுவந்ததில் இடம்பெற்ற மோசடி குறித்து முன்னெடுக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக அவர் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், சஷீந்திர ராஜபக்ஷ லஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் 7 அரை மணி நேரம் வாக்குமூலம் வழங்கினார்.








# கணவனால் கழுத்து வெட்டப்பட்டுக் கொல்லப்பட்ட ஆசிரியையின் இறுதி கிரியை; கிராமமே சோகமயம்

(கி.வசந்தன்)

கணவனால் கழுத்து வெட்டப்பட்டுக் கொலை செய்யப்பட்ட ஆசிரியையின் இறுதி கிரியைகள் வவுனியா நெடுங்கேணி அனந்தர்புளியங்குளம் நொச்சிக் குளத்தில் நேற்று நடைபெற்றது.

தனது மனைவியைத் தாம் கொலை செய்தார் எனக் கணவர் மனைவியின் தலையுடன் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்த கொடூர சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றிருந்தது.

இந்தச் சம்பவத்தில் அனந்தர்புளியங்குளம் நொச்சிகுளத்தை சேர்ந்த ஆசிரியையான சுகிர்தரன் சுவர்ணலதா (வயது32) என்ற பெண் கொல்லப் பட்டிருந்தார்.

கணவனின் வாக்கு மூலத்தைப் பெற்ற புளியங்குளம் பொலிஸார் தடயவியல் பொலிஸாரின் உதவியுடன் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஆசிரியயின் சடலம் வவுனியா வைத்தியசாலையில் இடம்பெற்ற உடற்கூற்று பரிசோதனையின் பின் நேற்று முன்தினன் மதியம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

நேற்று இறுதி கிரியைகள் நடைபெற்ற நிலையில் பெருந்திரளான கிராம மக்கள் கலந்து கொண்டு ஆசிரியைக்கு அஞ்சலி செலுத்தினர்.

இதன்போது நொச்சிகுளம் கிராமமே சோகத்தில் முழ்கியிருந்தது.













# திருமலை திருக்கடலூர் மீனவரை கடலில் வைத்து தாக்கிய வாழைச்சேனை படகு உரிமையாளரும் மீனவர்களும் கைது!

## நேற்றுக் காலை வீதி மறியல் போராட்டத்தை அடுத்து

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை திருக்கடலூர் மீனவர்களை கடலில் வைத்து தாக்கிய வாழைச்சேனை படகின் உரிமையாளர் மற்றும் அதில் பயணித்த மீனவர்கள். ஆகியோர் திருகோணமலை திருக்கடலூர் மீனவர் வீதி மறியல் போராட்டத்தை அடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 8.00 மணி முதல் 11.30 வரை கடும் வெயிலுக்கு மத்தியில் திருகோணமலை புல்மோட்டை பிரதான வீதியின் திருக்கடலூர் பகுதியில் பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தவர்கள், ஊர் மக்கள். அயலில் உள்ள கிராமங்களின் மீனவர்கள் இணைந்து வீதியை மறித்து போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தமது படகைத் தாக்கியவர்கள் கைது செய்யப்பட வேண்டும், அது வரை போராட்டம் தொடரும் எனக் கூறி போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

இதனை அடுத்த அங்கு வந்த திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் உதவி பொலிஸ அத்தியட்சகர் ஆகியோர் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து விவரங்களைக் கேட்டறிந்தனர்.

பின்னர் அந்த இடத்திலிருந்தே தாக்குதலில் ஈடுபட்ட படகின் விவரங்களை வாழைச்சேனை பொலிஸாருக்கு வழங்கி உடனடியாகவே படகைக் கைப்பற்றி, அதன் உரிமையாளரையும் கைது செய்ய நடவடிக்கை எடுத்தனர். அதனை அடுத்து வீதி மறியலில் ஈடுபட்டவர்களிடம் சென்று விடயம் பொலிஸ் அதிகாரிகளால்கூறப்பட்டது.இதனைஏற்றுபோராட்டம் முடிவடைந்தது.

கடந்த 3 ஆம் திகதி திருக்கடலூரில் இருந்து இரண்டு வெளியிணைப்புப் படகுகளில் மீன்பிடிக்காக இலங்கைத் துறை பகுதிக்கு 6 மீனவர் சென்றனர். அவ்வாறு அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த நேரம் வாழைச்சேனையில் இருந்து வந்த பாரிய விசைப்படகு ஒன்று மேற்படி இரண்டு படகுகளில் ஒன்றை மோதி தாக்கிய பின்னர், அந்த விசைப் படகில் இருந்தவர்கள் கடலில் தத்தளித்த மீனவர்களைப் பொல்லுகளால் கடுமையாக தாக்கியுள்ளனர். அவர்களிடம் வாள்களும் இருந்துள்ளன. படகு நீரில் கவிழ்ந்த நிலையில் மீனவர் தம்மை காப்பாற்றுமாறு உதவி கோரி அழைத்துள்ளனர். அவ்வேளை அங்கு வந்த மற்றுமொரு படகு இவர்களைக் காப்பாற்றியுள்ளது.

நேற்றுக் காலை போராட்டம் நடைபெற்ற இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ரொஷான் அக்மீமன, மாவட்ட மீன்பிடித்திணைக்கள உதவிப் பணிப்பாளர் ஆகியோர் வருகை தந்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடி இருந்தனர்.

இதற்கிடையில் –

நேற்று நண்பகல் திருகோணமலையில் இருந்து வாழைச்சேனை சென்ற விசேட பொலிஸ் குழுவினர், வாழைச்சேனை மீன்பிடி இறங்கு துறையில் வைத்து மேற்படி தாக்குதலில் ஈடுபட்ட சந்தேகநபர்கள் மூவரையும் கைது செய்து மாலை 7.00 மணியளவில் திருகோணமலைக்கு அழைத்து வந்தனர். பின்னர்அவர்கள்துறைமுகபொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டனர்.இவர்களை இன்று காலை திருகோணமலை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த உள்ளனர் எனப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கூறினார்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையில் தாமே தாக்குதலை மேற்கொண்டனர் என மூவரும் ஒப்புதல் அளித்துள்ளனர் எனவும் அறிய முடிகின்றது.







# கர்ப்பிணி பெண்கள், முதியோர் முகக் கவசம் அணிய வேண்டும்

## சுகாதார துறை அமைச்சர் அறிவுறுத்தல்

கொரோனா பாதிப்புகள் குறித்து பெரிய அளவில் அச்சப்பட தேவையில்லை எனவும் எனினும், பொது இடங்களுக்கு செல்லும்போது கர்ப்பிணிகள், முதியவர்கள், இணை நோய் உள்ளவர்கள் முக கவசம் அணிய வேண்டும் என்றும் தமிழ் நாடு சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித் துள்ளார்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள டி.எம்.எஸ். வளாகத்தில் நீடித்த நுரையீரல் அடைப்பு நோய் மற்றும் கொழுப்புமிகு கல்லீரல் நோய் விழிப்புணர்வு பயிற்சி முகாமை சுகாதார துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன் தினம் தொடங்கி வைத்தார். இதன்போது அவர் செய்தி யாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

“கொரோனா பரவலுக்கு பிறகு, இதய பாதிப்புகள், நுரை யீரல் பாதிப்புகள் அதிகரித்துள்ளன. இந்தியாவில் நீடித்த நுரையீரல் அடைப்பு நோயால் உயிரிழப்புகள் அதிகம் ஏற்படுகிறது. நீண்ட காலமாக புகை பிடிப்பது, காற்று மாசு, தொழில்சார் நோய் பாதிப்புகள் போன்றவைதான் இதற்கு முக்கிய காரணமாக உள்ளன.

அதேபோல, கொழுப்புமிகு கல்லீரல் நோய் என்பதும் அதிக உயிரிழப்புகளை ஏற்படுத்துகிறது. நமது வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களால் உலகம் முழுவ தும் சுமார் 30 சதவீத மக்கள் இந்த நோய் பாதிப்புகளுக்கு ஆளாகின்றனர். மேற்கண்ட 2 நோய்கள் குறித்து கள பணியா ளர்கள் மூலம் மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக் கில் இந்த திட்டம் தொடங்கப்பட்டுள்ளது.

கொரோனா பாதிப்புகள் குறித்து பெரிய அளவில் அச்சப்பட தேவையில்லை. தமிழகத்தில் 216 பேர் கண்காணிப்பில் உள்ளனர். 3 நாள்களில் சளி, இருமல், தொண்டை வலி,



காய்ச்சல் பாதிப்புகள் குணமடைகின்றன. இதுபோல பாதிப் புகளுக்கு உள்ளானவர்களை அந்தந்த மாவட்ட சுகாதார அலுவலர்கள் கண்காணித்து வருகின்றனர்.

நோய் பாதிப்பு உள்ளவர்கள் பொது இடங்களில் இருமினாலோ, தும்மினாலோ அவர்களது எச்சில் துகள் காற்றில் பரவக்கூடும். இதன்மூலமாக, எதிர்ப்பு சக்தி குறை வாக உள்ளவர்கள், முதியவர்கள், இணை நோய் பாதிப்பு உள்ளவர்கள் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது.

எனவே, மத்திய சுகாதார துறை அறிவுறுத்தலின்படி, பொது இடங்களுக்கு செல்லும் கர்ப்பிணி பெண்கள், முதியவர்கள், நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்கள், இணைநோய் பாதிப்பு உள்ளவர்கள் முக கவசம் அணிய வேண்டும். தனிமனித இடைவெளியை கடைபிடிப்பது, அடிக் கடி சோப் போட்டு கைகளை கழுவுவது நல்லது. இணை நோய் உள்ளவர்கள் உயிரிழக்கும்போது, கொரோனா தொற்று கண்டறியப்பட்டால், அது கொரோனா இறப்பாக கருதப்படாது.” என்றார்.

# பெங்களூர் சனநெரிசல் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழு வழக்கு பதிவு

பெங்களூர் சனநெரிசல் சம்பவம் தொடர்பாக இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழு தாமாக முன் வந்து வழக்குப் பதிவு செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

பெங்களூர் அணி நிர்வாகம் சார்பில் பெங்களூர் சின்னசுவாமி கிரிக்கெட் மைதானத்தில் வரவேற்பு நிகழ்ச்சி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் பங் கேற்பதற்காகப் பல்லாயிரக்கணக்கான இரசிகர்கள் ஒன்றுகூடினர்.

இதன்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 11 பேர் உயிரிழந்ததுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

போதிய முன்னேற்பாடுகள் இன்றி வெற்றிக்கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்ததே இதற்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது. இந்நிலையிலேயே பெங்களூர் சனநெரிசல் சம்பவம் தொடர் பாகத்தேசியமனிதஉரிமைகள்ஆணைக் குழு தாமாக முன்வந்து வழக்குப் பதிவு செய்துள்ளது.

# நடிகர் விஷால் 21 கோடி ரூபாவினை 30 வீத வட்டியுடன் வழங்க வேண்டும்

## லைகா வழக்கில் உயர் நீதிமன்றம் உத்தரவு

லைகா நிறுவனத்துக்கு 21 கோடியே 29 லட்சம் இந் திய ரூபாவை 30 சதவீத வட்டியுடன் வழங்க வேண்டும் என நடிகர் விஷால் தரப்புக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நடிகர் விஷால், தனது விஷால் பிலிம் பேக்டரி நிறுவனத் துக்காக சினிமா பைனான்சியர் அன்புச்செழியனின் கோபு ரம் பிலிம்ஸ் நிறுவனத்திடம் பெற்ற 21 கோடியே 29 லட்சம் இந்திய ரூபா கடனை, லைகா நிறுவனம் ஏற்றுக் கொண்டு செலுத்தியது. அந்த தொகை முழுவதும் திருப்பி செலுத்தும் வரை, விஷால் பட நிறுவனத்தின் அனைத்து படங்களின் உரிமைகளும் லைகா நிறுவனத்துக்கு வழங்க வேண்டுமென ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தத்தை மீறி, படங்களை வெளியிட்டதாகக் கூறி, பணத்தை திருப்பித் தர உத்தரவிடக் கோரி விஷாலுக்கு எதிராக லைகா நிறுவனம் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், 15 கோடி இந்திய ரூபாவை வைப்பு செய்ய உத்தரவிட்டிருந்தது. இந்த உத்தரவை இரு நீதிபதிகள் அமர்வு உறுதி செய்தது. இந்த வழக்கை நீதிபதி பி.டி.ஆஷா விசாரித்தார். இந்த



வழக்கில் தீர்ப்பு தள்ளிவைக்கப்பட்டு இருந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் நீதிபதி பி.டி.ஆஷா நேற்று தீர்ப்பளித்தார். லைகா நிறுவனத்துக்கு வழங்க வேண்டிய 21 கோடியே 29 லட்சம் இந்திய ரூபாவை 30 சதவீத வட்டியுடன் விஷால் தரப்பு வழங்க வேண்டும். வழக் குச் செலவு தொகையையும் லைகா நிறுவனத்துக்கு விஷால் தரப்பு வழங்க வேண்டும் என்று அந்த தீர்ப்பில் நீதிபதி குறிப்பிட்டுள்ளார்.





# சீனாவின் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டால் உலகளாவிய வாகன உற்பத்தி பாதிப்பு

சீனாவின் முக்கியமான கனிம ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளால் ஏற்படும் விளைவுகள் குறித்த உலகம் முழுவதும் கவலைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், சில ஐரோப்பிய வாகன உதிரிபாக தொழிற்சாலைகள் உற்பத்தியை நிறுத்திவிட்டன.

மேலும், மெர்சிடிஸ் பென்ஸ் அரிய பூமி தாதுக்களின் பற்றாக்குறையிலிருந்து பாதுகாக்க வழிகளைப் பரிசீலித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏப்ரல் மாதத்தில் சீனா பல்வேறு வகையான அரிய மண் தாதுக்கள் மற்றும் தொடர்புடைய காந்தங்களின் ஏற்றுமதியை நிறுத்த முடிவு செய்தது.

இந்த அறிவிப்பானது உலகெங்கிலும் உள்ள வாகன உற்பத்தியாளர்கள், குறைக்கடத்தி நிறுவனங்கள் மற்றும் இராணுவ ஒப்பந்தக்காரர்களுக்கான விநியோகச் சங்கிலிகளை அச்சத்தில் ஆழ்த்தியது.

பசுமை எரிசக்தி மாற்றத்திற்கு முக்கியமான கனிமத் துறையில் சீனாவின் ஆதிக்கம், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடனான வர்த்தகப் போரில் பெய்ஜிங்கிற்கு ஒரு முக்கியப் புள்ளியாகக் கருதப்படுகிறது.

உலகின் அரிய மண் தாதுக்களில் சுமார் 90 வீதத்தை சீனா உற்பத்தி செய்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# ஜப்பானில் குறைவடையும் குழந்தைகள் பிறக்கும் வீதம்

ஜப்பானில் புதிதாகப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது.

கடந்த ஆண்டு ஆண்டு பிறப்புகளின் எண்ணிக்கை வரலாறு காணாத அளவுக்கு வீழ்ச்சியை சந்தித்துள்ளதாக புதன்கிழமை வெளியிடப்பட்ட அரசாங்கத் தரவுகள் தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டில் ஜப்பானில் 686,061 குழந்தைகள் பிறந்தன. இது முந்தைய ஆண்டை விட 5.7 சதவீதம் குறைவு என்றும், 1899 இல் பதிவுகள் தொடங்கியதிலிருந்து புதிதாகப் பிறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 700,000 இற்கும் குறைவாக இருப்பது இதுவே முதல் முறை என்றும் அந்த நாட்டு சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்த சரிவு அரசாங்கத்தின் கணிப்பை விட சுமார் 15



ஆண்டுகள் வேகமாக வந்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.







# 2ஆம் உலகப்போரின்போது வீசப்பட்ட 3 குண்டுகள் ஜேர்மனியில் கண்டெடுப்பு

## 20,000 பேர் வெளியேற்றம்

ஜேர்மனியின் கோலோன் நகரில், இரண்டாம் உலகப் போரின் போது வீசப்பட்ட 3 வெடிக்காத குண்டுகள் பொதுப் பாதுகாப்புத் துறை, பொலிஸார் மற்றும் வெடிகுண்டு மீட்புக் குழுவினரால் வெற்றிகரமாக செயலிழக்கப்பட்டுள்ளன.

மேற்படி குண்டுகள் Deutz பகுதியில் உள்ள கப்பல் துறை அருகே கடந்த திங்கள் கிழமை கண்டுபிடிக்கப் பட்டன. அந்தப் பகுதியில் வீடுகள், கடைகள், பள்ளிகள், ஹோட்டல்கள், ஒரு பெரிய மருத்துவமனை மற்றும் ஒரு முக்கியமான ரயில்நிலையம் காணப்படுவதால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் பொது மக்களின் உதவியுடன் மேற்படி குண்டுகள் செயலிழக்கச் செய்யப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைக்காக அந்த பகுதியை விட்டு சுமார் 20,000 மக்கள் வெளியேற்றப்பட்டனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையானது இரண்டாம் உலகப்போருக்குப் பின் இடம்பெற்ற மிகப்பெரிய மீட்புப் நடவடிக்கையாகும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கோலோன் நகரம், இரண்டாம் உலகப்போரில் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஒன்று என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 06.06.2025




உங்கள் அணுகுமுறையில் வன்மையை தவிர்க்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும். நிறைவேறாத உங்களின் லட்சியங்களுக்காக வருந்த வேண்டாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சிறப்பாக திட்டமிட்டால் முன்னேற்றம் காணலாம்.

நட்பான அணுகுமுறை மற்றும் இனிமையான வார்த்தைகள் மூலம் உங்கள் துணையுடனான நட்பை இனிமையாக்கலாம்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். உங்கள் செலவுகளை கண்காணியுங்கள்.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினை ஏற்படலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




பிரச்சினை அல்லது மனக் குழப்பம் காரணமாக இன்றைய நாளை அனுபவிக்கும் மனநிலை உங்களிடம் இருக்காது. நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும்.

நீங்கள் உங்கள் பணிகளை திறம்பட மேற்கொள்வீர்கள். உங்கள் திறமைக்கு அங்கீகாரம் கிடைக்காத காரணத்தினால் நீங்கள் ஏமாற்றமடைவீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேசுவதன் மூலம் நல்லுறவை வளர்ப்பீர்கள்.

இன்று கணிசமான தொகை சம்பாதித்தாலும் தவிர்க்கமுடியாத செலவுகள் காரணமாக நீங்கள் பணத்தை தக்க வைத்துக்கொள்ள இயலாது.

பெரிய அளவிலான ஆரோக்கியப் பிரச்சினை ஏதும் இருக்காது. ஆனால் நீங்கள் அசௌகரியமாக உணர்வீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியாக உற்சாகமாக இருப்பீர்கள். உங்களிடம் ஆற்றல் நிறைந்து காணப்படும்.

உங்கள் பணிக்கு பாராட்டு கிடைக்கும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் நேர்மையாக வெளிப்படுத்துவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று சிறந்த ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தைப் பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம்தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.

இன்று உடல் சூடு சம்பந்தமான பிரச்சினை ஏற்படலாம். தண்ணீர் அதிகமாகப் பருகவும்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீகச் சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பண வரவு காணப்படும்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று நீங்கள் உங்களை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டும். எந்த செயலிலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். இசை கேட்பதன் மூலம் மன ஆறுதல் பெறலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திறம்பட ஆற்றுவதற்கு நீங்கள் திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சூடான விவாதம் நடக்க வாய்ப்புள்ளது. எனவே அமைதியாக இருப்பது சிறந்தது.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். அனாவசியமாக பணம் செலவாகாமல் காத்துக் கொள்ளுங்கள்.

அதிக உடல் உழைப்பு காரணமாக தலைவலி ஏற்படலாம். காயம் ஏற்படாமல் இருக்க வாகனம் ஓட்டும் போது கவனமாக இருக்க வேண்டும்.




தொடர் முயற்சி மூலம் இன்று நீங்கள் வெற்றி காணலாம். உங்கள் நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். இன்று நீங்கள் சிறப்பாக செயல்படுவீர்கள்.

உங்கள் சகபணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் திறமைக்கு பாராட்டு பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சிறந்த உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.இதனால் இருவருக்கும் இடையே நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

அதிர்ஷ்டம் காரணமாக ஊக்கத் தொகை அல்லது சலுகை வகையில் இன்று பண வரவு ஏற்படும்.

இன்று நிறைந்த ஆற்றலுடன் இருப்பீர்கள். ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயற்றிறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும் பிரார்த்தனை மற்றும் தியானம் ஆறுதலை அளிக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 06.06.2025




இன்று சகஜமான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். பிறருடன் நட்பான அணுகுமுறை மேற்கொள்ளுங்கள். உங்கள் தொடர்பாடலை கட்டுப்படுத்த வேண்டும்.

அதிக பதட்டம் காரணமாக பணியின் போது தவறுகள் செய்தது போல உணர்வீர்கள். தன்னம்பிக்கையுடன் இருங்கள்.

உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் இருவரும் நல்ல புரிந்துணர்வையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்து கொள்வீர்கள்.

உங்களால் இன்று பணம் சம்பாதிக்க இயலும். என்றாலும் வீணான செலவு காரணமாக நீங்கள் சேமிக்க இயலாது.

இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். தியானம் மேற்கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




நீங்கள் விருந்துகளில் கலந்து கொள்ள நேரலாம். மற்றும் உங்களுக்கு பிரியமானவர்களை உங்கள் வீட்டுக்கு அழைக்க நேரலாம். உங்கள் முயற்சியின் மூலம் உங்கள் வாழ்க்கைத் தரம் உயரும்.

நீங்கள் உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள். என்றாலும் பதட்டத்திற்கு ஆளாவீர்கள்.

உங்கள் துணையுடன் நட்பாக இருக்க முயல்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று நீங்கள் சிறிய கடன் வாக நேரலாம். மேலும் இழப்பு ஏற்படாமல் இருக்க சிறிது பணத்தை சேமியுங்கள்.

தாயின் உடல் நலத்துக்காகச் செலவு செய்வீர்கள். பெரிய அளவில் பாதிப்பு இருக்காது எனவே கவலை வேண்டாம்.




உங்கள் மனதிலிருந்து எதிர்மறை எண்ணங்களை நீக்காவிடில் உங்கள் வளர்ச்சி பாதிக்கும். மதிப்பு மிக்க பொருளை இழக்க வாய்ப்புள்ளதால் கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் சக பணியாளர்களுடன் கருத்து வேறுபாடு காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையிடம் உங்களுக்கு அசௌகரியமான உணர்வு காணப்படும். இதை அவருக்கு தெளிவாக உரைப்பது சிறந்தது.

இன்று சில நிதி கட்டுப்பாடுகள் காணப்படும். நிதியில் ஸ்திரத்தன்மை காண நீங்கள் உங்கள் செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

செரிமானம் மற்றும் கண் சம்பந்தமாக பிரச்சினைகள் இன்று காணப்படும்.




உங்கள் வாழ்வில் சிறந்த வளர்ச்சி காணப்படும். உங்கள் செயல்களை இன்று விரைந்து ஆற்றுவீர்கள்.

வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். உங்கள் வளர்ச்சி குறித்து மகிழ்ச்சி அடைவீர்கள்.

உங்கள் துணையுடன் உற்சாகமாக நடந்து கொள்வீர்கள். அவருடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

இன்று நிதிநிலைமை அதிர்ஷ்டகரமாக இருக்கும். நீங்கள் விரைந்து பணம் சம்பாதிப்பீர்கள்.

இன்று துடிப்பாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். இதனால் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

# பிறந்து 2 நாள்களேயான குழந்தையை விற்க முயன்ற தாய்க்கு சிறைத்தண்டனை



பிறந்து 2 நாள்களேயான குழந்தையை 75,000 ரூபாவுக்கு விற்பனை செய்ய முயன்ற வழக்கில் குழந்தையின் தாயாருக்கு 7 வருடங்கள் கடூழிய சிறைத் தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பை அறிவித்துள்ளது.

வழக்குத் தொடர்பில் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி நவரத்ன மாரசிங்க நேற்று இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக 20,000 ரூபா அபராதமும் விதித்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டதுடன் அபராதம் செலுத்தப்படாவிட்டால் மேலும் 6 மாதங்கள் சிறைத்தண்டனையும் விதித்து நீதிபதி உத்தரவிட்டார்.

பிரதிவாதியான 3 குழந்தைகளின் தாயான அந்த பெண்ணும் மற்றும் அவரது கணவரும் நடத்தும் சட்டவிரோத கருக்கலைப்பு மையத்திற்குச் சென்ற ஒரு பெண்ணை பிரசவத்திற்குப் பிறகு கருக்கலைப்பு செய்யாமல் குழந்தையை விற்க வற்புறுத்தப்பட்டதுடன், குழந்தையைப் பெற்றெடுத்த பிறகு பிரதிவாதி 2 நாள் குழந்தையை 75,000 ரூபாய்க்கு விற்றபோதுபொலிஸ் அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டார்.

இதேவேளை, குற்றம் சாட்டப்பட்டவர் செய்த குற்றம், முழு மனித இனத்தையும் அதிர்ச்சிக்குள்ளாக்கும் ஒரு மனிதாபிமானமற்ற செயல் என்றும் நீதிபதி குற்றம் சாட்டினார்.

மேற்படி தாயார் செய்த செயல் கடுமையானது மற்றும் வருந்தத்தக்கது என்றும் இதுபோன்ற குற்றங்களை இலகுவாகக் கருத முடியாது என்றும் இது போன்ற குற்றங்களுக்கு மென்மையான தண்டனைகளை வழங்குவது சாத்தியமில்லை என்றும் நீதிபதி சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.